**ஜனவரி – 20**

# TNPSC துளிகள்

- தெலுங்கானாவின் ஐதராபாத்தில் சமயோசித மற்றும் நீடித்த விவசாயத்திற்கான வேளாண் தீர்வை காணல் மீதான 2 நாட்கள் அக்ரி-விஷன் 2019 (Agri-Vision 2019) மாநாட்டை குடியரசு துணைத் தலைவர் தொடங்கி வைத்தார்.
- ஒடிசா மாநில அரசானது பிஜு ஸ்வஸ்த்யா கல்யாண் திட்டத்தின் (Biju Swasthya Kalyan Yojana-BSKY) கீழ் இலவச மருத்துவ சேவைகளை அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்துவதாக அறிவித்துள்ளது.
    - முன்னதாக இந்த அனைவருக்குமான இலவச மருத்துவ சேவையானது கிராமங்களில் உள்ள துணை மருத்துவ மையங்கள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் மட்டுமே கிடைக்கப்பெற்றது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் கீழ் திபாங் பள்ளத்தாக்கு மாவட்டத்தில் உள்ள சிப்பு ஆற்றின் மீது கட்டப்பட்ட 426 மீட்டர் நீளமுடைய டிஃப்போ பாலத்தை பாதுகாப்பு அமைச்சர் திறந்து வைத்தார். இந்திய சீன எல்லைப் பகுதியில் அமைந்துள்ள இந்தப் பாலமானது எல்லைப்பகுதி சாலைகள் நிறுவனத்தால் (Border Roads Organization) கட்டப்பட்டது.
    - இது மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தால் நிதியுதவி அளிக்கப்பட்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## ஒய்வூதியம் பெறுவோர்க்கான தளம்

- ஒய்வூதியம் பெறுவோர்க்கான புதிய தளமான https://tnpensioner.tn.gov.in ஐ தமிழக துணை முதல்வர் தொடங்கி வைத்தார்.
- இந்தத் தளமானது கருவூலம் மற்றும் கணக்குகள் துறை மற்றும் தேசிய தகவல் மையம் ஆகியோரால் இணைந்து உருவாக்கப்பட்டது
- இந்த தளத்தின் மூலம் கீழ்காண்பனவற்றை கருவூலம் / ஒய்வூதியம் வழங்கும் அலுவலகத்திற்கு செல்லாமல் அணுக முடியும்.
    - வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட மாதாந்திர ஒய்வூதியத் தொகை விவரங்கள்,
    - திருத்தப்பட்ட ஒய்வூதியத் தொகையை மீட்டெடுத்தல்,
    - மேம்படுத்தப்பட்ட குடும்ப ஒய்வூதியம் மற்றும் இதர சேவைவைகள்.

## தமிழ்நாட்டின் ஐம்பதாம் ஆண்டு விழா கொண்டாட்டம்

- சென்னை என இருந்த மாநிலத்தின் பெயரை தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்டதன் 50 ஆம் ஆண்டு (2019) நினைவு விழா கொண்டாடப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

- 1969 ஆம் அண்டு ஜனவரி 14 அன்று பொங்கல் விழாவில் CN அண்ணாதுரை தலைமையிலான திமுக அரசானது சென்னை மாகாணத்தை தமிழ்நாடு எனப் பெயர்மாற்றம் செய்தது.
- 1956 ஜூலை 27-ல் சென்னை மாகாணத்தை தமிழகம் எனப் பெயர் மாற்றம் செய்யக்கோரி போராடிய முதல் மனிதர் காங்கிரஸின் தியாகி சங்கரலிங்கனார் ஆவார்.

# தேசியச் செய்திகள்

## இந்திய சினிமாவின் முதல் தேசிய அருங்காட்சியகம்

- மகாராஷ்டிராவின் மும்பையில் நாட்டின் முதலாவது இந்தியா சினிமாவிற்கான தேசிய அருங்காட்சியகத்தை (National Museum of Indian Cinema -NMIC) பிரதமர் திறந்து வைத்தார்.
- இந்த அருங்காட்சியகமானது நூற்றாண்டு கால பழமையான இந்திய திரைப்படங்களின் பயணத்தை விளக்கமாக காட்ட முற்படுகின்றது.
- இந்த NMIC ஆனது திரைப்பட இயக்குநர் ஷ்யாம் பெனகலின் தலைமையிலான அருங்காட்சியக ஆலோசனை குழுவின் வழி காட்டுதலின் கீழ் கட்டப்பட்டது.
- கவிஞர் பிரசூன் ஜோஷி தலைமையிலான புத்தாக்கக் குழுவும் NMIC-ஐ மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது.

## வானிலிருந்து வான்வழி இலக்குகளை தாக்கும் ஆயுதச் சோதனை

- இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் லிட் நிறுவனமானது பளு குறைந்த போர் விமானத்தை (Light Combat helicopter- LCH) வடிவமைத்து உருவாக்கியுள்ளது. இது வானிலிருந்து வான்வழி இலக்குகளை அழிக்கும் சோதனையில் பறக்கும் விமானத்தில் உள்ள இலக்கை ஏவுகணையை மூலம் தாக்கி வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.



- நாட்டில் ஒரு ஹெலிகாப்டர் மூலம் வானிலிருந்து வான்வழி இலக்குகளை தாக்கி அழிக்கும் சோதனை செய்யப்படுவது இதுவே முதன்முறையாகும்.
- இதில் தலைக்கவசம் வழியேயான பார்வை மற்றும் முன்புறம் நோக்கிய அகச்சிவப்பு கதிர் மூலமான பார்வை அமைப்பு ஆகியவை பொருத்தப்பட்டுள்ளது. இப்போது LCH விமானிகள் தரை மற்றும் வான்பகுதியில் உள்ள எந்த இலக்குகளையும் கண்டறிந்து அழிக்க முடியும்.

## எல்லை மேலாண்மைகான பிரத்யேக செயற்கைக்கோள்

- பாகிஸ்தான் மற்றும் வங்காள தேசத்துடன் மற்றும் பிற நாடுகளுடனான தனது எல்லைகளை மேலும் வலுப்படுத்த உதவும் செயற்கைக்கோளை இஸ்ரோவானது உள்துறை அமைச்சகத்திற்கென பிரத்யேகமாக செலுத்த உள்ளது.
- இந்த நடவடிக்கையானது எல்லை மேலாண்மையை மேம்படுத்துவதில் விண்வெளித் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது மீதான பணிக்குழுவின் பரிந்துரைகளின் ஒரு பகுதியாகும்.
- எல்லை மேலாண்மையை மேம்படுத்துவதில் விண்வெளித் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு உகந்த பகுதிகளாக அடையாளம் காண்பதற்காக பணிக்குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கைக்கு உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தப் பணிக்குழுவானது எல்லை மேலாண்மையின் இணை செயலாளரை தலைவராகவும், BSF, விண்வெளித்துறை மற்றும் உள்துறை அமைச்சகத்தின் எல்லை மேலாண்மை பிரிவின் உறுப்பினர்களையும் கொண்டது.

## மாவட்ட சுரங்க நிதி திட்டம்

- மத்திய அரசானது மாவட்ட சுரங்க நிதி திட்டத்தின் கீழ் செலவிடும் படி மாநில அரசுகளை கேட்டுக் கொண்டுள்ளது.

**Funds utilised for projects in high priority sectors**

| Sector | (₹ cr) |
|---|---|
| Drinking water supply | 1,039.37 |
| Environment preservation & pollution control measures | 113.63 |
| Health | 467.09 |
| Education | 1,020.87 |
| Welfare of women and children | 135.54 |
| Welfare of aged and disabled people | 36.26 |
| Skill development | 136.39 |
| Sanitation | 460.67 |

- பிரதம மந்திரியின் கனிஜ் ஷேத்ரா கல்யாண் திட்டத்தின் (Pradhan Mantri Khanij Kshetra Kalyan Yojana-PMKKKY) கீழ் வசூலிக்கப்பட்ட 23,606 கோடி ரூபாயில் 24 சதவீதம் மட்டுமே உண்மையில் செலவிடப்பட்டுள்ளதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- PMKKKY ஆனது சுரங்க நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நலத்திட்டங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தத் திட்டத்தின் கீழ் வருவாயின் ஒருபகுதி (தாதுக்களிலிருந்து பெறப்படும் உரிமைத் தொகையில் 10-30%) சுரங்க பகுதிகளின் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## இரண்டாவது முறையாக ஸ்வீடன் பிரதமர் பதவியேற்பு

- ஸ்வீடனின் பாராளுமன்றமானது 4 மாதகால அரசியல் நிலையற்ற தன்மைக்கு முடிவு கட்டி ஸ்டீபன் லோப்வென்-ஐ இரண்டாவது 4 ஆண்டு கால பதவிகாலத்திற்கு பிரதமராக தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்த அரசியல் நிலையற்றத் தன்மையானது 2018 செப்டம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் எந்தவொரு அரசியல் கட்சியும் பெரும்பான்மை பெறாததையடுத்து ஏற்பட்டதாகும்.




- தற்பொழுது பெரும்பான்மையில்லாத இந்த அரசை பசுமைக் கட்சி, மத்திய கட்சி மற்றும் லிபரல் கட்சி ஆகியவற்றின் ஆதரவுடன் லோப்வென் அமைத்துள்ளார்.
- 349 உறுப்பினர்களைக் கொண்ட ஸ்வீடனின் பாராளுமன்றத்தில் 115 உறுப்பினர்கள் லோப்வென்க்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில் 153 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர் மற்றும் 77 பேர் நம்பிக்கை வாக்கெடுப்பை புறக்கணித்தனர்.
- ஸ்வீடன் நாட்டின் அரசியல் அமைப்பின் கீழ் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையானவர்கள் (175 உறுப்பினர்கள்) ஒரு தனி நபருக்கு எதிராக வாக்களிக்காத வரை அவர் பிரதமராக இருக்கலாம்.

# பொருளாதாரச் செய்திகள்

## UK சின்ஹா தலைமையிலான பணிக்குழு

- இந்திய நொடித்தல் மற்றும் திவால் நிலை வாரியம் (The Insolvency and Bankruptcy Board of India - IBBI) ஆனது செபியின் முன்னாள் தலைவரான UK சின்ஹாவின் தலைமையில் 11 உறுப்பினர்களைக் கொண்ட பணிக்குழுவை அமைத்துள்ளது.

- இந்த பணிக்குழுவானது (7 உறுப்பினர்கள், 4 அழைப்பாளர்கள்) நிறுவன குழுமங்கள் நொடித்து போதல் குறித்த கருத்துகளை ஆய்வதோடு பொருத்தமான கட்டமைப்புகளையும் பரிந்துரை செய்யும்.
- தற்போது உள்ள திவால் மற்றும் நொடித்து போதல் விதிமுறையானது (IBC) தனிப்பட்ட நிறுவனங்களுக்கு கலைப்பு அல்லது பணம் செலுத்துதலை வழங்கும்.
- எனவே இது NCLT யின் அதிகார வரம்புகளில் பல நிறுவனங்களைக் கொண்ட பெரு நிறுவனக்குழுமங்களின் மொத்த சொத்துக்களின் மீதான தீர்மானம் அல்லது கலைப்புக்காக நொடித்தல் மற்றும் திவால் விதிமுறைகளுக்குள்ளாக ஒரு கட்டமைப்பை உருவாக்க முயல்கிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## BES கண்காட்சி 2019

- 25-வது தரைவழி மற்றும் செயற்கைக்கோள் ஒளிபரப்பு மீதான சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சியான BES கண்காட்சி சமீபத்தில் புதுடெல்லியில் நடைபெற்றது.
- இந்த கண்காட்சியின் கருத்துருவானது, "தகவல் தொழில்நுட்ப உலகில் அடுத்த தலைமுறை ஒளிபரப்பு" என்பதாகும்.
- இந்த BES கண்காட்சி 2019 ஆனது இந்திய ஒளிபரப்பு பொறியியல் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.




# மாநிலச் செய்திகள்

## செயற்கை நுண்ணறிவில் முதல் இளங்கலை தொழில்நுட்பவியல் கல்வி

- IIT ஐதராபாத் ஆனது செயற்கை நுண்ணறிவில் முழுமையான இளங்கலை தொழில்நுட்பக் (B.Tech) கல்வியை வரும் கல்வியாண்டு (2019-20) முதல் தொடங்கவுள்ளது.
- இதனால் இதுபோன்ற கல்வியை வழங்கும் முதல் இந்திய கல்வி நிறுவனமாக இது மாறும்.
- மேலும் இது அமெரிக்காவில் அமைந்துள்ள கார்னிகி மெல்லன் பல்கலைக்கழகம்

மற்றும் மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றிற்குப் பிறகு இந்த படிப்பை வழங்கும் உலகின் 3-வது நிறுவனமாகும்.

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## ரோசா பார்க் ட்ரைல்பிளேசர் விருது

- இந்திய அமெரிக்க புரவலரும் தொழிலதிபருமான குரிந்தர் சிங் கால்சாவுக்கு (45) புகழ்மிக்க ரோசா பார்க் ட்ரைல்பிளேசர் விருது வழங்கப்பட்டது.
- சீக்கிய சமூகத்தினர் தங்கள் தலைப்பாகை (டர்பன்) அணிந்து கொள்வதற்காக தங்கள் கொள்கையை மாற்றியமைக்கும்படி அமெரிக்க அதிகாரிகளை கட்டாயப்படுத்திய இவரின் பிரச்சாரத்திற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- 2007ல் கால்சா தான் அணிந்திருந்த தலைப்பாகையின் காரணமாக விமானத்தில் ஏறுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டார்.



- - - - - - - - - - - - - - -